**சார்பு நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**OS No. 57/2012**

**DW.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகைதீன் இபுராகிம் உம்மா | ஊர் | : | |
| த/பெ | : | | வட்டம் | : | |
| தொழில் | : | | மாவட்டம் | : | |
| வயது | : | | ஜாதி | : | |

தேதி: 13.06.2025.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, எங்கள் சொத்தை நாங்கள் கேட்கிறோம். எங்கள் சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியமானது என்றால் காதர் பாத்து உம்மாளுக்கு பாத்தியமானது ஆகும். அவருக்கு முன்பாக யாருக்கு பாத்தியமானது என்றால் அது எனக்கு தெரியாது. காதர் பாத்து உம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண். 245, நான்கு எல்லைகள் தெரியாது. சர்வே எண். 245 ற்கான ஆவணம் எதையும் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்தது இல்லை. முகம்மது சதக் என்பவருக்கு பாத்தியமான சொத்திற்கான சர்வே எண்ணோ நான்கு மாலோ எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எத்தனை இலக்கங்களாக காட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. முகம்மது சதக்கிற்கு பாத்தியமான சொத்தை பொறுத்து யார் பெயரில் ஆரம்ப காலம் மற்றும் தற்போதும் பட்டா இருந்து வருகிறது என்று எனக்கு தெரியாது. முகம்மது சதக் என்பவருக்க பாத்தியமான சொத்துககளை பொறுத்து முகைதீன் இப்ராகிம்உம்மா பெயருக்கோ, 5 முதல் 8 பிரதிவாதிகள் பெயருக்கோ பட்டா எதுவும் ஏற்பட்டதா என்று எனக்கு தெரியவில்லை. முகம்மது சதக் என்பவருக்கு பாத்தியமான சொத்துக்களை பொறுத்து 5 முதல் 8 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருவதற்கு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. முகம்மது சதக்கின் மனைவி பெயர் காதர் பாத்து உம்மா என்றால் சரிதான்.

அவர்களது மக்கள்தான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள நான்குநபர்கள் என்றால் சரிதான். சர்வேஎ ண். 245 சொத்திற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்து வந்ததும், தற்போது யார் பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றும் எனக்கு தெரியாது. சர்வே எண். 245 ல் 5 முதல் 8 பிரதிவாதிகளோ, எங்கள் முன்னோர்களோ அனுபவம் செய்து வந்ததை காட்டுவதற்கு பட்டாவோ ரசீதோ எதுவும் இல்லை. சர்வே எண். 245 ற்கு 5 முதல் 8 பிரதிவாதிகள் பெயரிலோ அவர்கள் முன்னோர் பெயரிலோ பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். முகைதீன் இப்ராகிம் உம்மாளின் வாரிசுகள் அவர்களுக்குரிய பங்கினை 10.05.1948 வாதிகளின் முன்னவர்களுக்கு கிரையம் கொடுததுவிட்டனர் என்று பிராதில் கூறப்பட்டுளளதை மறுத்து எதிர்வழக்குரையில் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 10.05.1948 ல் முகைதீன் இப்ராகிம் உம்மாளின் கணவர் முகம்மது சதக்கத்துல்லா அவர்களது மக்கள் முகம்மது மதா சாகிபு, செய்யது அலி அக்பர், செய்யது இப்ராகிம் அக்தம் ஆகியோர் அவர்களுக்குரிய பங்கினை வாதியின் முன்னோர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டனர் என்று பிராதில் சொல்லப்பட்டிருப்பதை மறுத்து எதிர்வழக்குரையில் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். முகம்மது சதக்கிற்கு பாத்தியமான சொத்தில் அவரது மகனான முகம்மது இப்ராகிம் சாகிபுவின் மனைவி மற்றும் மக்கள் அவருக்குரிய பங்கினை 24.12.1954 ல் கிரையம் கொடுத்துள்ளனர் என்று எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள 24.12.1954 ஆவணத்தில் முகம்மது சதக்கின் வாரிசுகளில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு பாத்தியமானது என்றும் யார் யாரிடம் கிரையங்கள் பெறப்பட்டிருக்கிறது என்றும் சொல்லி மேற்படி 1954 கிரைய பத்திரத்தினை எழுதி கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. முகைதீன் இப்ராகிம் உம்மா இறந்த பிறகு அவரது கணவர் முகம்மது சதக்கத்துல்லா மற்றும் அவரது மக்களும்

அவர்களுக்குரிய பங்கினை கிரையம் கொடுத்துளளனர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 1954 ஆவணத்திலுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும், அதில் எனது தகப்பனார் உள்ளிட்ட எனது பாட்டியின் வாரிசுகள் கிரையம் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரமும் காட்டப்பட்டிருப்பதால், விவரங்கள் எதுவும் தெரியாது என்று சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல.

**ஒம்/– திருமதி. எம். அகிலா தேவி, எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, இராமநாதபுரம்.**